சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 03.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **102/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | கார்த்திகேயன் |
| தந்தை பெயர் | : | முனுசாமி |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 43 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 2, 4 மற்றும் 5 எதிரிகள் ஆஜர். 7 ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**1 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. முதல் விசாரணையில் எனக்கு மயக்கம் வந்துவிட்டது என கூறியுள்ளேன். அந்த மயக்கம் எனக்கு எத்தனை மணிக்கு தெளிந்தது என்றால் 4.30 மணிக்கு தெளிந்தது. புகாரிலும், போலீசார் என்னை விசாரித்தபோதும் 7 ம் எதிரி R.M.S. சுப்பிரமணி என் சாதியை பற்றி தர குறைவாக பேசி வெட்டுங்கடா என்று சொன்ன பின்புதான் நான் தாக்கப்பட்டேன் என்று விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஞானராஜ், 5 ம் எதிரி சுரேஷ் ஆகியோர்கள் என்னை இரும்பு கம்பியால் தாக்கியபோது வலது மற்றும் இடது கையில் காயங்கள் ஏற்பட்டதாக புகார் மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2. நான் முதல் விசாரணையில் கூறிய படி சுப்பிரமணி சாதியை பற்றி தர குறைவாக பேசி வெட்டுங்கடா என்று மற்ற எதிரிகளிடம் சொன்னபின்னர் நான் தாக்க படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 5 ம் எதிரி சுரேஷ் என்னை இரும்பு கம்பியால் அடித்து காயம் எதுவும் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. தங்களை தாக்கியதாக சொல்லப்படும் நபர்களின் பெயர் மற்றும் விபரம் தெரியாததால் ஞானராஜ் என்ற நபரின் பெயரை இந்த வழக்கின் முதல் விசாரணையில் சொன்னால் சரியல்ல. 7 ம் எதிரி சுப்பிரமணியன் என்பவர் எனது ஊர் காரர் மற்ற எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திற்கு முன்பு 1 முதல் 6 எதிரிகளின் பெயர்களை எனக்கு தெரியுமா என்றால் 1ம் எதிரியின் பெயர் மட்டும் தான் தெரியும். 2 முதல் 6 எதிரிகளின் பெயர்கள் எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்திற்கு முன்பு 2 முதல் 6 எதிரிகளை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் அளித்த அ.சா.ஆ-1 ஆன புகாரிலும், போலீசார் விசாரித்தபோதும் 2 முதல் 6 எதிரிகளை அடையாளங்களை பற்றியும், வயதை பற்றியும் சொல்லியுள்ளேனா என்றால் நான் எதுவும் சொல்லவில்லை. இந்த

வழக்கின் முதல் விசாரணையில் 1 முதல் 6 எதிரிகளையும் தெரியும் என்று நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

3. முதல் விசாரணை சாட்சியத்தில் எனக்கு இடது கையிலும், வலது கையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேன். இதனால் எனக்கு சட்டையிலும், பேன்டிலும் இரத்த கரை ஏற்பட்டுள்ளதா என்றால் ஆமாம். போலீசார் இரத்த கரை படிந்த ஆடைகளை பார்த்தார்களா என்றால் ஆமாம் பார்த்தார்கள். போலீசார் மேற்படி எனது உடைகளை போலீசார் பெற்றுக்கொண்டார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் மண் தரையில் இரத்தம் படிந்திருந்ததா என்றால் ஆமாம் படிந்திருந்தது.

4. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி 30.06.2011 ஆம் தேதி அன்று மதியம் 3.00 மணியளவில் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்கு செல்லவில்லை, 7ம் எதிரி எனது சாதியை பற்றி தர குறைவாக பேசி தாக்க சொன்னதாக சொல்லுவது தவறு என்றும், சொன்னால் சரியல்ல. 1 முதல் 6 எதிரிகள் என்னை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு எதிரிகள் யாரும் வரவில்லை என்றும், எதிரிகள் எந்தவிதமான குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தாக சொல்லக்கூடிய இடத்திற்கு எதிரிகள் 1019 என்ற எண்ணுல்ல இண்டிகா காரிலும், PY02-y-5314 என்ற பதிவெண் கொண்ட ஸ்கார்பியோ காரிலும் எதிரிகள் வந்ததாக நான் முதல் விசாரணையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6. அ.சா-2 தனபால் எத்தனை வருடம் பழக்கம் என்று சொன்னால் எனக்கு சிறு வயது முதல் பழக்கம். அ.சா-2 தனபாலை அழைத்துக்கொண்டு டாடா ஏசி வாகனத்தில் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்கு சென்றேன் என்று சொன்னால் சரிதான். அந்த டாடா ஏசி வாகனத்தை காவல் நிலையத்திற்கு நான் தான் ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். டாடா ஏசி வாகனத்தில் இருந்து இறங்கும் போது அதன் மேல்லுள்ள இரும்பு கம்பி பட்டு தான் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தலையில் அந்த காயத்தை வைத்து பொய்யாக புகார் ஒன்று அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எதிரிகள் அடித்ததாகவும் அதில் எனக்கு கைகளில் காயம் ஏற்பட்டதாகவும் பொய்யாக நான் மருத்துவனையிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர் என்பதற்கான முகாந்திரம் எதுவும் இல்லாமல் முதல் விசாரணையில் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர் என சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.03 17:08:47 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.